# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2013 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, ஹங்குரான்கெத மாதன்வல ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2013 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013, மே மாதம் 23 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2013 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, ஹங்குரான்கெத மாதன்வல ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2013 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.*]

*ச.வ.ஓ.கூட். 20/2011*

**ஹங்குரான்கெத மாதன்வல ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

''ஹங்குரான்கெத மாதன்வல ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம்'' என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்ற மொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன் றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

***1***. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, ஹங்குரான்கெத மாதன்வல ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*ஹங்குரான்கெத மாதன்வல ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

***2***. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''மன்றம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''ஹங்குரான்கெத மாதன்வல ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றத்தின்'' தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர் களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனத்துப் பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்)

2-PL 006080 -990(2011/06)

''ஹங்குரான்கெத மாதன்வல ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம்'' என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்க ளிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்ட தாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் எந்தக் குறிக்கோள்களுக்காக அமைத்துரு வாக்கப்படுகின்றதோ அந்தக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) ஹங்குரான்கெத, மாதன்வலயில் அமைந்துள்ளவையும் தற்பொழுது நூறு ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்தவையுமான ஸ்ரீ தர்மோதய பிரிவென மற்றும் மகா விகாரை கட்டிடங்களைப் பேணிக்காத்தலும் புதுப்பித்தலும் பராமரித்தலும் ;

(ஆ) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிவென மற்றும் மகா விகாரையைப் பேணி வளர்த்தலும் அபிவிருத்தி செய்தலும் பராமரித்தலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினதும் ஏனைய இலங்கையர்களினதும் நலனுக்கு சமூக, கலாசார, கல்வி மற்றும் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்துத் தொகுத்தலும் நடைமுறைப்படுத்தலும் ;

(ஈ) தோதான தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் சுய தொழிலை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கையின் வறிய மற்றும் தேவைநாடும் மக்களின் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தல் ; அத்துடன்

(உ) அரசாங்க மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளுடனும் சமய குழுமங்களுடனும் கலாசாரக் குழுக்களுடனும் சர்வதேச ஒழுங்கமைப்புகளுடனும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுடன் ஒத்த குறிக்கோள்களையுடைய ஏனைய நிறுவனங்கள், ஒழுங்கமைப்புகள் என்பவற்றுடனும் நெருக்கமாக ஒன்றித்துப் பணியாற்றுதல்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களின் நடைமுறைப்படுத்துதலானது இனம், மதம், மொழி, சாதி, பால் நிலை அல்லது அரசியல் அபிப்பிராயம் என்பவற்றின் அடிப்படையிலான பாகுபாடு எதுவுமின்றி மேற்கொள்ளப்படுவதனை கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வருன உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகின்றவாறான அல்லது விரும்பித்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமான தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், கொள்ளுவதற்கும், வாடகைக்கு எடுப்பதற்கும், நிர்மாணிப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் அத்துடன் வேறுவகையில் பெறுவதற்கும் ;

(ஆ) நிதிகளைத் திரட்டுவதற்கும் காசாகவாயினுஞ்சரி அல்லது பொருளாகவாயினுஞ்சரி மானியங்களை, அன்பளிப்புகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் :

ஆயின், நிறைவேற்றுக்குழு எல்லா வெளிநாட்டு மானியங்கள், அன்பளிப்புகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில் நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின்

அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் ;

(இ) செலாவணி உண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் அத்துடன் கொடுத்து மாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றைத் தயாரிக்கவும், வரையவும் கையேற்கவும், கழிவு வழங்கவும், புறக்குறிப்பிடவும், கொடுத்து மாற்றவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் அத்துடன் மாற்றுண்டியல்களை வழங்கவும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும், பேணவும், மூடிவிடவும் ;

(ஈ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ்சரி எவையேனும் அரசாங்க அல்லது அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளுடன் அல்லது வேறு எவரேனும் ஆளுடன் அல்லது நிறுவனத்துடன் ஒப்பந்தங்களை, பங்காண்மைகளை அல்லது உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்கும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை நிறைவேற்றுக் குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும் தொழிலுக்கமர்த்துவதற்கும் வேலை நீக்கம் செய்வதற்கும் அல்லது அவர்களது சேவைகளை முடிவுறுத்துவதற்கும் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துவதற்கும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினரைப் பயிற்றுவிப்பதற்கும் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுறுதியுடனும் நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான வேறு எல்லா விடயங்களையும் செய்வதற்கும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**5.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாசனக் கையளிப்பு என்பதன் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையில் அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் எடுக்கவும், வைத்திருக்கவும் சட்டத்தில் இயலுமானதாதலாலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்துவமும் நிர்வாகமும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான முறையில் தெரிவுசெய்யப்படக்கூடியவர்களான அத்தகைய எண்ணிக்கையினரான பதவி தாங்குநர்களையும் கொண்ட நிறைவேற்றுக்குழுவொன்றி னால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சர் அந்த அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் என்னும் பதவி வரிசைக்கு குறையாத அலுவலர் ஒருவரை நிறைவேற்றுக்குழுவின் பதவிவழி உறுப்பினராக நியமித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழு இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) (அ) நிறைவேற்றுக்குழுவின் பதவிதாங்குநர் எவரும் அடுத்தடுத்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் அதே பதவியினை வகித்தலாகாது :

ஆயினும் அத்தகைய பதவிதாங்குநர் இரண்டு ஆண்டுகள் கழிந்தபின்னர் அதே பதவிக்கு மீள நியமிக்கப்படலாம்.

(ஆ) ஐயத்தை தவிர்ப்பதற்கு ஆளெவரும் நிறைவேற்றுக் குழுவின் அதே பதவியை (காப்பாளரின் பதவி உட்பட) அத்தகைய ஆளின் ஆயுட்காலப்பகுதிக்குத் தொடர்ந்து வகித்தலாகாது.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மையொன்றுடனும் பின் வரும் எல்லாக் கருமங்களுக்கும் அல்லது அவற்றுள் எதற்கும் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத் துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறை யானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி துறத்தல் அத்துடன் உறுப் பினர்களால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள் ;

(ஆ) நிறைவேற்றுக்குழுவின் பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்தல் அல்லது அவர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் பதவி தாங்குநர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரை நியமித்தலும் அவர்களது தத்துவங்களும், பணிகளும் கடமைகளும் நியதி நிபந்தனைகளும் ;

(ஈ) நிறைவேற்றுக்குழுவின், கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் ஏதேனும் துணைக்குழுவின் கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் வெற்றிடங்களை நிரப்புவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைகள், அத்தகைய கூட்டங்களின் அறிவித்தல்கள் மற்றும் நிகழ்ச்சிநிரல்கள், கூட்ட நடப்பெண் அத்துடன் அவற்றில் அலுவல்களை நிறைவேற்றுதல் ;

(உ) நிறைவேற்றுக் குழுவினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினர்களது தகைமைகளும் தகைமையீனங்களும்; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று என்றாற்போன்று அதே போன்ற கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் திருத்தப் படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அன்பளிப்பு, இறுதி விருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியங்கள் என்ற வகையில் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் நிறைவேற்றுக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டவாறான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கணக்காளர் தலைமையதிபதியால் அல்லது அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராகவுமுள்ள ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர்கள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்

புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

*மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவையுமான தனிசுகள்.*

**10.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்துக்குரிய எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்களும், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பின் வரையறை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் நோக்கத்திற்கு அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்கு உறுப்பாண்மைக் கட்டணமாக அத்தகைய உறுப்பினர்களிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்குக் காலத்துக்குக்காலம் வருமதியான தொகையை விஞ்சிய உதவுதொகை எதனையும் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டாத நிறுவனமாக இருத்தல்.*

**12.** (1) கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டாத ஒழுங்கமைப்பொன்றாக இருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தின் ஆதாயங்கள், இலாபங்கள் அல்லது பங்கிலாபங்கள் ஏதேனுமிருப்பின் அதன் எப்பகுதியும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது.

(2) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்டபின்னர் எத்தன்மையதுமான பணம் அல்லது ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய பணம் அல்லது ஆதனமானது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும்

வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தலிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடை செய்யப்பட்டுள்ளவையுமான வேறு ஏதேனும் நிறுவனத்துக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக்குழுவின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிற் தவிர எத்தன்மையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாசனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது ஆளெவரும் சாட்சியொருவராக கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும்.

*ஆண்டறிக்கை.*

**14.** நிறைவேற்றுக்குழு ஒவ்வொரு நிதியாண்டிற்கும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தலும் அத்தகைய அறிக்கையை கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுடன் சொத்து அறிக்கை தொடர்ந்தும் ஆண்டினை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

*குடியரசினது உரிமைகளைப் பேணுதல்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்